2006 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்டி. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

125—

கோயில் பராமரிப்பு

***441—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயிலினை சுற்றுலாத் துறைமூலம் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான கோயில்கள் மாநில இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்மூலமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது சுற்றுலாத் தலத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையுடன் குடிதண்ணீர் வசதி, உணவகம், சாலை வசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலமாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், தேனி தொகுதி, குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயில், தினமும் இரண்டாயிரம் பக்தர்களும், சனிக்கிழமைதோறும் 25,000 பக்தர்களும் வந்து செல்லுகின்ற இடமாகும். குச்சனூர் பகுதியானது, ஒரு பேரூராட்சிப் பகுதி. அங்கு போதும ன நிதிவசதி இல்லாத காரணத்தால், கடந்த 2005–2006 ஆம் ஆ டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சுற்றுலாத் துறையின்மூ ம் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் அடிப்படை வசதிக ள செய்வதற்கு துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. தற்சமயம், சுற்றுல த்

துறை ஆணையர் அலுவலகத்தில் ஆய்வில் இருக்கின்றது. Part-II திட்டத்தின்கீழ், அங்கு அடிப்படை வசதிகளைச் செய்துக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டில் சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தேனி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு கோரப்பட்டுள்ளது. தேனி தொகுதி, குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது குறித்து தேனி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. எச். வசந்தகுமார்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில், கூந்தன்குளம் என்ற இடத்திற்கு உலகச் சுற்றுலா மக்கள் அதிகமாக வருகிறார்கள். அங்கு அடிப்படை வசதிகள் குறைவாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்சள் அதைத் செய்து கொடுப்பாரா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளிலே அடிப்படை வசதிகள் செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியிலே தேன்கனிக்கோட்டையிலுள்ள அருள்மிகு பேட்டராசாமி திருக்கோயில் மிகவும் பிரசித்திப்பெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வெளி மாநிலங்களிலிருந்து தரிசிக்க வருகின்றனர். ஆகவே, அந்தக் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர், கழிப்பறை, தங்கும் வசதி, போன்ற அடிப்படைத் தேவைகளை சுற்றுலாத் துறைமூலம் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

2006 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயிலில் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு, அங்கே அதிகமான சுற்றுலாப் பயணிகள வருகை தந்தால், துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

நியுரோ சயின்ஸ்

***1674—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவ, மாணவிகள் மூளையின் செயல்திறனை அதிகரிக்கும் நியுரோ சயின்ஸ் வழிமுறைகளைப் பயன்படுத்தி, நவீனக் கல்வியைப் போதிப்பது குறித்த புதிய திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆய்வில் உள்ளது. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ மாணவிகளின் மூளையின் செயல்திறனை அதிகரிக்கும் நியுரோ சயின்ஸ் பாடத் திட்டம், பள்ளி மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில், சர்வதேச நிறுவனமான, Perform Concepts International என்ற நிறுவனம், இந்தியாவில் தன்னுடைய செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது. ஆகவே, தமிழகத்திலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மனித மூளை சற்று சிக்கலானது. இப்படி நியுரோ சயின்ஸ் பற்றியெல்லாம் இங்கே கேட்கக்கூடிய, சிக்கலான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS